நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.116/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | நடராஜன் |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | சீலநாயக்கன்பட்டி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**6 ம் எதிரி ஆஜரில் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.05 PM

1. நான் தற்போது கொளத்தூர் பாரத வங்கியில் கிளை மேலாளராக பணபுரிந்து வருகிறேன். கொளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எங்களது வங்கியை அணுகி 9095482225 என்ற மொபைல் எண் சம்மந்தப்பட்ட 01.04.2024 முதல் 05.06.2024 வரையிலான வங்கி கணக்கு அறிக்கைகளை கேட்டனர்.

2. எங்களது வங்கி Core Banking முறையில் இந்திய அளவில் உள்ள வங்கி நெட்வொர்க்கில் இணைப்பட்டுள்ளது. ஒரு செல்போன் எண்ணை எங்கள் கணினியில் உள்ளீடு செய்தால் அது எந்த வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அந்த வங்கி கணக்கு எங்களது வங்கி சம்மந்தப்பட்டது என்றால் அது எந்த கிளையாக இருந்தாலும் அதுசம்மந்தப்பட்ட வங்கி கணக்கு விவரங்களை எங்களால் பார்வையிட்டு எடுக்கமுடியும்.

3. அந்த வகையில் மேற்படி செல்போன் எண்ணை எங்களது வங்கி மென்பொருளில் உள்ளீடு செய்து நான் எடுத்துக்கொடுத்த வங்கி கணக்கு அறிக்கை தான் என்னிடம் காட்டப்படுவது. **மேற்படி வங்கி கணக்கு அறிக்கை ஒளியச்சு நகல்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் மேலும் தாக்கல் செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் உரிய சான்றிடப்படாததாலும் சாட்சியிடம் எந்த வங்கி கிளை கணக்கு பராமரிக்கப்படுகிறது என்ற கேட்டபோது அதுப்பற்றியான விவரங்களை தனது வங்கி கணினியில் பார்த்து தான் தெரிவிக்கமுடியும் என்று சொன்னதாலும் மேற்படி உரிய விவரங்களுடனும் சான்றிடப்பட்ட ஆவணங்களும் சாட்சியம் அளிக்க வேண்டி முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.15PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.116/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | தனபால் |
| கிராமம் | : | மொரட்டு பாளையம் |
| வட்டம் | : | ஊத்துக்குளி |
| மாவட்டம் | : | திருப்பூர் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**6 ம் எதிரி ஆஜரில் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.10 PM

1. நான் தற்போது திருப்பூரில் குடியிருக்கிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை செய்கிறேன். இந்த வழக்கின் எதிரிகளான ஆனந்தனை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. நான் TN 33 AZ 6364 பதிவெண் கொண்ட இனோவா காரை வைத்திருந்தேன். அந்த காரை நான் ஆனந்தன் என்பவருக்கு

விற்றுவிட்டேன்.

2. ஆனால் நான் மேற்படி காரை பெயர் மாற்றம் செய்யாமல் விற்றுவிட்டேன். மற்றப்படி எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. TN 33 AZ 6364 பதிவெண் கொண்ட இனோவா காரை நான் திருப்பூர் மாற்றம் அறக்கட்டளை நிறுவனத்தின் சார்பாக இயங்கும் குடிபோதை மற்றும் மனநலம் சிறப்பு சிகிச்சை மருத்துவ மையத்திற்கு வாடகைக்கு விட்டிருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் காரை விற்றுவிட்டேன்.
2. நான் உண்மையில் வாகனத்தை விற்றிருந்தால் அவரது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் மாற்றம் செய்ய சொன்னேன் அவர் செய்வதாக சொன்னார். ஆனால் செய்யவில்லை. என்னுடைய காரை பயன்படுத்திதான் இவ்வழக்கின் கோவிந்தசாமி என்பவரை கடத்தி சித்தரவதை செய்துள்ளார்கள் என்றாலும் அந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல.
3. எதிரி ஆனந்தன்தான் மாற்றம் அறக்கட்டளையின் முக்கியமான நபராவார் என்றால் சரிதான். வாகனம் எனது பெயரில் இருப்பதால் எனது பெயரில் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவேண்டும் என்று சொல்லி மனுதாக்கல் செய்து நான் கையெழுத்து செய்து வாகனத்தை வாங்கினேன்.
4. வாகனத்தை பெயர் மாற்றம் செய்யாததால் வாகனத்தை எனது பொறுப்பில் வாகனம் வாங்கிய தேதியில் இருந்து எனது பொறுப்பில்தான் உள்ளது. இந்த வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றாலும் ஆனந்தனுடன் சேர்ந்துக்கொண்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வாகனத்தை அடுத்த வாய்தா தேதியில் ஆஜர்

செய்கிறேன்.

**மேற்படி சாட்சி பெற்றுக்கொண்ட இனோவா வாகனத்தை ஆஜர் செய்வதற்காக அரசு தரப்பின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**